## அகலவத்த பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகலவத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 70,400 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட சங்கீத உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 220,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக, தளபாடங்களினதும், உபகரணங்களினதும் பெறுமதி மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 149,600 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட கெகுலந்தல முன்பள்ளிப் பாடசாலையில் காணப்பட்ட 19 பொருள் விடயங்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய 14 பொருள் விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரிய ரூபா 53,549 தொகையான செலுத்த வேண்டிய செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்குமீதி ரூபா 53,036,433 ஆக இருந்த போதிலும், பாலிந்தநுவர பிரதேச சபை ஒதுக்கீடாக ரூபா 1,224,851 தொகை குறைக்கப்பட்டதன் காரணமாக மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கின் மீதி ரூபா 1,224,851 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 8,610,268 தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 666,398 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) அகலவத்த பிரதேசசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பாலிந்தநுவர பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,342,424 தொகை மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,782,632 ஆகவும், பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அகலவத்த பிரதே சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி 5,931,815 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய பரீட்சை மீதி வரவு மீதிகளின் கூட்டுத்தொகையை விஞ்சிய செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 374,499 ஆக இருந்ததுடன் அந்த வேறுபாட்டை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் முற்கொடுப்பனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2009 முதல் 2013 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 947,130 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பாலிந்தநுவர பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,782,632 தொகையான மீதி மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,342,424 தொகையான மீதி என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 3,610,109 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களில் உள்ளடங்கியுள்ள ஏதாவதொரு அசைவுறாத ஆதனமொன்று அல்லது அசையாத |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆதன வகைகள் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரியொன்று அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் ஆதனவரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | |
| | (i) விதி 197 | - | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் நுகர்வுக் களஞ்சியப் பொருள் பதிவேடு பரீட்சிக்கப்பட்டு செயலாளரால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | 41,701,404 | சபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவைகளின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | - | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,343,281 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,038,346 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,638,297 | 3,183,488 | 3,179,306 | 918,133 | 3,228,000 | 2,907,619 | 2,846,074 | 749,831 |
| வாடகை | 8,440,000 | 8,670,483 | 8,689,897 | 112,612 | 8,166,500 | 8,781,281 | 7,917,494 | 132,026 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 285,000 | 335,509 | 335,509 | - | 236,500 | 220,565 | 174,480 | - |
| ஏனைய வருமானம் | 11,083,000 | 13,623,873 | 9,766,919 | 3,856,955 | 10,681,500 | 13,172,144 | 12,884,854 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 881,857 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 25,813,354 ஆக இருந்தது. ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கல்கள் ரூபா 21,807,512 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 4,887,699 ஆகும்.

### 2.2.3 வாடகை

இளைஞர் சேவை நிலையம் அமைந்துள்ள காணியை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,419,617 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,000,000 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உபவிதி

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 ஆம் ஆண்டில் சபையினால் ரூபா 6,045,897 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் இந்தக் கிரயத்தை மேவுகை செய்வதற்கு கழிவுப்பொருள் வரி விதிப்பதற்காக உப விதியொன்றை விதித்துக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக சபை அறிந்திருக்கும் வகையில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் சபைக்கு இது தொடர்பாக தெரிந்திருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(i) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் சமர்ப்பிக்கப்படாமை.

(ii) தேவையான தரவுகள் இனங்காணப்படாமை.

(iii) தரவுகளை சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான அறிவும் அனுபவமும் இல்லாமை மற்றும் தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படாமை.

(iv) தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இனங்காணப்படாமை மற்றும் சபைக்குச் சொந்தமாக போதியளவு பௌதீக வசதிகள் காணப்படாமை.

(v) இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிறுவனத்திற்குச் சொந்தமான பதவியணியினரை ஈடுபடுத்தும் திட்ட முறையொன்றும் பதவியணியினர்களுக்கும் பயிற்சியளிக்கும் முறைமையொன்றும் நடாத்தப்படாமை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

(அ) சபையினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் இரண்டாம் நிலையில் 03 பதவிகள், ஆரம்ப நிலையில் 06 பதவிகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 04 பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 25 வாகனங்களை செயற்படுத்தும் வகையில் சபைக்குச் சொந்தமாக 08 சாரதிகள் இந்ததுடன் 03 இயந்திர செயற்படுத்துனர்கள் மாத்திரம் இருந்தனர்.

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

**ஆதனவரி மதிப்பீடு செய்யப்படாமை**

ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் உள்ள சகல அசையாத ஆதகங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அகலவத்த பிரதேச சபையின் சில வீதிகள் தவிர ஏனைய ஆதனவரி வலயங்களில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**கையேற்கப்படாத சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமாக 26 மயான நிலங்கள் காணப்பட்ட போதும், 2018 சனவரி வரையிலும் ஒரு மயான நிலம் மாத்திரம் கையேற்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை எல்லையில் உள்ள ஹெலம்ப விளையாட்டு மைதானத்தை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அகலவத்த இடர் முகாமைத்துவ நிலையத்தின் இரண்டு மாடிக்கட்டிடம் சபைக்குச் சொந்தமான காணியில் 2010 ஆம் ஆண்டின் போது கொரிய நிர்மாணக் கம்பனியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு முறையான எழுத்துமூல உடன்படிக்கையின்றி சபைக்குக் கையேற்கப்பட்டிருந்தது. இக்கட்டிடம் சரியான தரத்துடனும் நியமத்துடனும் நிர்மாணிக்கப்படாமையினால் உடைத்து அகற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தது. இதற்காக சபை நிலைக்கு உள்ளாகியிருந்தது. இதற்காக சபை ரூபா 643,023 தொகையான செலவினத்தைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 50 ஜீ.ஐ. குழாய்களின் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மொத்தப் பெறுமதி ரூபா 80,548 ஆக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த நட்டத்திலிருந்து ஒரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 48,676 தொகை 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

(அ) கித்துள்கொட நாஹேன வீதிக்கு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலையை நிறைவேற்றும் போது வீதியின் இருபக்கமும் மண்ணால் நிரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அகலவத்த, பின்னகொட, கொஸ்கஹஹேன பொது வீதிகளின் எஞ்சிய பகுதிகளுக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் இரண்டாவது தடவை தார் இடல் சரியான பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) வீதி சமப்படுத்தப்படாதிருந்ததுடன் மேற்பகுதி கீழிறங்கியிருந்தது.

(ii) வீதியின் 78 ஆவது மீற்றர் இடத்தில் உரிய பிரகாரம் ABC கலவை இடப்பட்டிருக்கவில்லை.

(இ) பின்னகொட நாவிட்டிகல வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் வீதியின் ஆழம் 0.125 மீற்றர்ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும், வீதியின் 19.5 மீற்றர் இடத்தின் ஆழம் 0.0769 மீற்றரும் 30.1 மீற்றர் இடத்தின் ஆழம் 0.102 மீற்றரும் ஆக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் 25 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையும், செலவினம் 37 சதவீதம் முதல் 265 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டமை. |
| | (ii) | செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடுகளை வழங்கும் போது சில செலவினங்கள் கைவிடப்பட்டமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | | மயான நிலங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் என்பன கையேற்கப்படாமை |
| (இ) இருப்புக்கள் | | களஞ்சியம் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக சரியான மேற்பார்வை இடம்பெறாமை. |
| (ஈ) ஊழியர் முகாமைத்துவம் | | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (உ) செயற்றிட்டம் / ஒப்பந்தம் | (i) | போதியளவான மேற்பார்வையின்மை |
| | (ii) | சரியான நியமத்தில் காணப்படாமை |
| | (iii) | நிறைவேற்றப்படாத வேலைப்பகுதிக்காக செலுத்தியமை |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) | வருமான மதிப்பீடு சாத்தியமானதாக இன்மை. |